JobAccess
Driving disability employment

# தகவல் ஏடு
# நீங்கள் இளவயது நபர் ஒருவருக்கு வேலை தர விரும்பும் பணியமர்த்துனரா?

உடலியலாமை உள்ள இள வயது நபர் ஒருவர் உங்களுடைய வர்த்தகத்திற்குப் பொருத்தமான ஆளாக இருக்கக்கூடும். உடலியலாமை உள்ள இள வயதுப் பணியாள் ஒருவரைக் கண்டுபடித்துத் தக்கவைத்துக்கொள்ள உங்களுக்கு உதவக்கூடிய இலவச அவுஸ்திரேலிய அரசாங்க சேவைகள் உள்ளன.

**‘உடலியலாமமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவைகள்’ (Disability Employment Scheme)** எனும் திட்டத்தினால் உடலியலாமை உள்ள இள வயதுப் பணியாட்களுக்கு வேலை கொடுத்து அவர்களைத் தக்கவைத்துக் கொள்வது உட்பட்ட பலவகையான இலவச சேவைகளை உங்களுக்கு அளிக்க இயலும். இவர்கள் ஒப்பந்தத்தின் கீழ் அரசாங்க வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குபவர்களாவர், மற்றும் உடலியலாமை, காயம் அல்லது உடல்நல நிலை உள்ள தகுதி பெறும் நபர்களுக்கு வேலை ஒன்றைத் தேடியெடுத்து அதைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஆதரவுதவி அளிக்க இவர்களால் இயலும்.

**‘சமூக அபிவிருத்தித் திட்டம்’ (Community Development Programme)** எனும் திட்டத்தினால் தொலைதூர அவுஸ்திரேலியப் பகுதிகளில் நீங்கள் வசிப்பவர் என்றாலும், உடலியலாமை உள்ள இள வயதுப் பணியாட்களுக்கு வேலை கொடுக்க நீங்கள் விரும்புகிறீர்கள் என்றாலும் சரியான பணியாட்களைத் தேடியெடுப்பதில் உங்களுக்கு உதவ இயலும்.

**‘தொழில்பயிற்சிகள் மற்றும் பயிற்சிகள்’ (Apprenticeships and Traineeships)** எனும் திட்டமானது உங்களுடைய வர்த்தகம் அல்லது தொழிலின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணியாட்களை ஈர்த்து, அவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நல்லதொரு வழியாக இருக்கக்கூடும்.

- ‘அவுஸ்திரேலியத் தொழிற்பயிற்சி’ **(Australian Apprenticeship)** என்பது உங்களுடைய தேவைகளையும், பணியாட்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வளைந்துகொடுக்கும் தன்மையோடு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு திட்டமாகும்.

- ‘உடலியலாமையுடைய அவுஸ்திரேலியத் தொழிற்பயிற்சியாளர் ஊதிய உதவி’ **(Disabled Australian Apprenticeship Wage Support (DAAWS))** எனும் திட்டமானது உங்களுடய உடலியலாமை உள்ள பயிலுநர் அவரது பயிற்சியில் முழுமையாகப் பங்குபற்றுவதை நீங்கள் உறுதி செய்வதற்கு உதவக்கூடிய ஒரு கொடுப்பனவு ஆகும். உங்களுடைய ‘அவுஸ்திரேலியத் தொழிற்பயிற்சியாள’ருக்கு அவருடைய தொழிற்பயிற்சி அல்லது பயிற்சிக் காலத்தின்போது உடலியலாமை ஏற்பட்டாலும; DAAWS திட்ட வசதி உங்களுக்குக் கிடைக்கும்.

இச் சேவைகளில் எதையும் பற்றிய மேலதிகத் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால் ‘ஜாப்அக்ஸெஸ்’ அமைப்பினரது www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது ‘ஜாப்அக்ஸெஸ்’ அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**